# பறம்பு மலை மக்களின் மானுட விழுமியங்கள்

*மா. ஆன்சி சகாய நிது*
பதிவு எண்: 241131501014 முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்க்கலை ஆய்வகம், தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

*முனைவர் இரா.நி. ஸ்ரீகலா*
உதவிப்பேராசிரியர் , தமிழ்க்கலை ஆய்வகம்
தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

https://doi.org/10.5281/zenodo.15526492

***ஆய்வுச் சுருக்கம்***

*மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியம் எனப்படுகின்றது. விழுமியங்களை நேர்மையுடன் பயன்படுத்துவதே அவற்றின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துகின்றது. இந்தத் தொடர்ச்சியே விழுமியத்தை தொடர்புடைய ஏனைய கருத்துருக்களான, நம்பிக்கை, கருத்து, எண்ணம் என்பவற்றிலிருந்து வேறுபடுத்துகின்றது. இத்தகைய சூழலில் விழுமியம் என்பது மனிதர் எதை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகிறார்களோ அதைக் குறிக்கிறது எனலாம். பச்சை மலை என்று ஒரு பெரிய மலை. அம்மலையின் உள்பகுதியில் நடுமலை, காரமலை, ஆதிமலை என்ற மூன்றடுக்கு மலைகள் இருக்கின்றன. இதை கடந்து சென்றால், பறம்பு மலை என்ற இன்னொரு மலை ஒன்று இருக்கிறது. பறம்பு மலையானது எவ்வியூர் என்ற ஊரில் இருக்கிறது. அங்கு பதினாறு குலத்தை சேர்ந்த மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இயற்கைக்கு சிறிதளவு கூட பாதகம் வரக்கூடாது என்று சொல்லி இயற்கையை தங்களது குழந்தைகள் மாதிரியே கவனித்தார்கள். அங்கு வாழும் மக்களுக்கு தேவையான பழங்கள், மூலிகைகள் அனைத்தும் அம்மலையிலே கிடைத்தது. இந்த செழுமையான பறம்பு நாட்டை வழிநடத்துப்பவனே வேள்பாரி. ஒரு நாள் பாரி நகர்வலம் போய்க்கொண்டு இருக்கும்போது, அங்கு ஒரு முல்லைச் செடியின் கொம்பு ஒன்று பிடிமானம் எதுவும் இன்றி தவித்ததை பார்த்து, மனம் நொந்த பாரி, முல்லைக்குத் தேர் கொடுத்தான். நாவலின் மைய கதாபாத்திரங்கள் பறம்பும் பாரியும் என்றாலும் இவர்கள் இருவரையும் ஒரு மைய புள்ளிக்குள் கொண்டு வரும் கதாபாத்திரம் கபிலர். கபிலருக்கு சொல்லப்படும் கதையை நமக்கு சொல்லப்படும் கதை. பின் கபிலர் பார்க்கும் கதையை நாம் அறியும் கதை. தன்னலமற்ற கொடை உள்ளத்தாலும் அன்பு வழிபட்ட வாழ்க்கை மரபாலும் பாரியின் புகழ் தமிழ் நிலமெங்கும் பரவியது. மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் அவன் புகழ் கண்டு வெதும்பி பாரிக்கு எதிராக அவர்கள் தனித்தனியாக மேற்கொண்ட போர் முயற்சிகள் கைகூடவில்லை. இறுதியில் மூவேந்தர்களும் ஒன்றிணைந்து சதி செய்து வஞ்சினம் நிகழ்த்தி பாரியின் உயிரைப் பறித்தனர். வீரத்தால் வீரத்தால் சாதிக்க முடியாததை துரோகம் செய்து முடித்தனர். இயற்கைக்கும் மனிதனின் பேராசைக்கும் இடையில் இன்று நடக்கும் போராட்டத்தின் ஆதி வடிவம் தான் வேள்பாரி வள்ளலின் மனிதத்தன்மை.*

***திறவுச்சொற்கள்:*** *விழுமியங்கள், வேள்பாரி, வள்ளல், கொடைத்தன்மை, பறம்பு.*

**முன்னுரை**

வேள்பாரி, வேளீர் குலத்தைச் சேர்ந்த பழங்கால குறுநில மன்னர். பறம்பு மலையையும் அதைச் சூழ்ந்த 300 கிராமங்களையும் பறம்பு நாட்டையும் ஆட்சி செய்து வந்தவர் தான் கடையேழு வள்ளல்களில் ஒருவரான பாரி. புலவர்களுக்கு பொன்னும் பொருளும் வாரி வழங்கி வந்ததால் பாரியின் அரசவையில் எப்பொழுதும் புலவர் கூட்டம் கூடிய படியே இருந்தது. புறநானூறு, அகநானூறு, பத்துப்பாட்டு என்ற சங்க இலக்கியங்களில் பல பாடல்களைப் பாடிய கபிலர் பாரியின் நெருங்கிய நண்பர் ஆவார். பாண்டிய நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் பாரியின் நற்குணங்களால் ஈர்க்கப்பட்டு பறம்பு நாட்டிற்கு இடம் பெயர்ந்தார். பின்னர் பாரியின் அரசவைப் புலவராகவே பொறுப்பேற்றார். இளைப்பாற நிழலின்றி தவிக்கும் வழிப்போக்கனின் கண்ணில் படும் பெரும் ஆலமரம் போன்று மூவேந்தர்களும் மன்னர்கள் பலரும் ஆண்ட தமிழகத்தில் தவித்தலைந்த உயிர்களுக்காத் தன்னையே தந்தவன் வேள்பாரி . தன்னலமற்ற கொடை உள்ளத்தாலும் அன்பு வழிபட்ட வாழ்வியல் மரபாலும் பாரியின் புகழ் தமிழ் நிலமெங்கும் எங்கனம் பரவியது என்று காண்போம்.

**மானுட விழுமியங்கள்**

செம்மையான மனித வாழ்க்கை, விழுமியங்களின் அடிப்படையிலே கட்டியெழுப்பப்படுகிறது. நீதிகளைப் புகட்டி, அறவழியில் மனிதர்களை வாழச் செய்ய வழிகாட்டும் வாழ்க்கை நெறிகளாகவே விழுமியங்கள் விளங்கின்றன. முழுமைத்துவ அன்பும், முழுமைத்துவக் கருணையும், முழுமைத்துவ உணர்வும், முழுமைத்துவ தெளிவும் மனிதத்துவத்தை வெளிப்படுத்தும் கண்ணாடியாகத் திகழ்கின்றன. மக்கள் வாழ்வில் அமைதி, அடக்கம், சாந்தி, சமாதானம், நல்லொழுக்கம் என்பன காணப்படும் போது தான் வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாகவும், இன்பம் பொங்குவதாகவும் அமையும் என்றால், மானுடம் நிறைந்த பண்பாட்டு வளர்ச்சியில் அன்பும், அறனும் தழைக்க வேண்டும், ஆற்றல் உருவம் பெற வேண்டும், என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். மனித விழுமியங்கள், சேர்க்கப்படாத அறிவு பயனற்றது. இது பற்றி தெய்வ புலவர் திருவள்ளுவர் கூறுவது

**அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்**
**தந்நோய்போல் போற்றாக் கடை**

**(திருக்குறள் : 315)**

பிற உயிர்களின் துன்பங்களைத் தன் துன்பம் போன்று எண்ணி அவ்வுயிர்களின் துயர் துடைத்து அவற்றைக் காப்பாற்ற விட்டால் ஒருவன் பெற்றுள்ள அறிவு வளர்ச்சியினால் என்ன பயன் ஏற்படப் போகிறது, என்பது இக்குறள் கூறும் கருத்து. அறிவு, விழுமியம் சார்ந்ததாக அமையும் போது தான், தான் பெற்ற அறிவு பயன் நிறைந்தது ஆகிறது. தன்னலத்திற்கு மேலாகப் பொது நலத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்வதும் தூண்டுவதும் விழுமியம் சார்ந்த அறிவு. பிறர் உயிர்கள் மீது அன்பு காட்டுதல், சேவைகள் செய்தல், உண்மை பேசுதல், நேர்மையாக நடத்தல், பிறர் நலம் பேணுதல், இன்னா செய்யாமை, நல்லொழுக்கம், சட்டங்களை மதித்தல், சூழலை மாசடையாது பேணுதல் இவை யாவும் ஆன்மீக செயற்பாடுகள். இக்கொள்கையை உட்கொண்டு தன்னலமின்றி பிறர் நலனை கருத்தில் கொண்டு ஆன்மீக செயல்பாடுகளுக்கு தன்மையே ஈடாகக் கொடுத்து இயற்கையையும் விலங்குகளையும் மனிதனையும் போற்றிப் பராமரித்து இன்றைய விஞ்ஞான உலகில் வாழும் மனிதர்களுக்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்தவரே கடையேழு வள்ளல்களில் ஒருவரான வேள்பாரி. உலகில் எவ்வுயிரையும் வெறுக்காத நிலை ஒருவனுக்கு ஏற்படுவது, மனித விழுமியங்களை உணர்த்துவதற்கும் மனிதர்களை நன்னடத்தை உள்ளவர்களாக ஆக்குவதற்கும் சமம். இந்நற்பண்புகளை உடைய வேள்பாரியின் மனித நேயத்தை இந்நாவலின் வரிகள் உணர்த்துகின்றன.

**கடையேழு வள்ளல்கள்**

சங்க காலத்தில் மற்றவர்களுக்கு கொடுத்து உதவும் பண்பும் நல்ல மனப்பான்மை கொண்டவர்களாகவும் இரக்கம் உடையவர்களாகவும் மக்கள் வாழ்ந்தனர். அந்த காலகட்டத்தில் பிறருக்கு வாரி வழங்குபவர்களை வள்ளல் என்று அழைத்தனர். அவ்வாறாக உதவி என்று வருபவர்களுக்கு வாரி வழங்குவதும் மனிதர்களுக்கு மட்டுமின்றி உயிருள்ள எல்லாவற்றிற்கும் தன்னலம் கருதாமல் பிறர் நலம் கருதி கொடுக்கும் குணநலன் பெற்றவர்களையே கடையேழு வள்ளல்கள் எனப் பெயர் பெற்றார்கள் சிறுபாணாற்றுப்படையை பாடிய நல்லூர் நத்தத்தனார் ஏழு வள்ளல்கள் பற்றியும் அவர்களின் கொடை மட செயல்கள் பற்றியும் கூறியிருப்பதை காணமுடிகிறது. கொடைமடைச் செயல்கள் என்றால் பகுத்தறியாது மடமையோடு கொடையளித்த செயல்கள் என்று கூறலாம். இத்தகைய செயல்களே அவ்வள்ளல்களுக்கு சிறப்பை சேர்த்தன என்பது உண்மையாகும். வள்ளல்களைப் பற்றி, எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றுப் பாடல்களும் கூறுகின்றன. பேகன், பாரி, காரி, ஓரி, அதியமான், ஆய், நள்ளி ஆகியோர் கடையேழு வள்ளல்கள் எனப் போற்றப்படுகின்றனர். இம்மன்னர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை ஆண்டவர்கள். தங்களின் கொடை வள்ளல் மூலம் மக்களின் மனதை கவர்ந்தவர்கள். மக்களின் மனம் அறிந்து அவர்கள் தேவையை உணர்ந்து வாரி வழங்கி நல்லாட்சி புரிந்த மன்னர்கள் ஆவார்கள்.

கடையேழு வள்ளல்கள் பற்றி சிறுபாணாற்றுப்படை காட்டும் தொகுப்பு

- பேகன் - மயிலுக்குப் போர்வை அளித்தவன். (பொதினி - பழனி)
- பாரி - முல்லைக்குத் தேர் தந்தவன். (பறம்புமலை)
- காரி - திருக்கோவிலூர் ஈர நன்மொழி கூறியவன்.
- ஆய் - நீலனாகம் நல்கிய கலங்கத்தை ஆலமர் செல்வனுக்கு (குற்றாலக்
- குருநாதருக்கு) அணிவித்தவன். (பொதிகை மலை)
- அதியமான் - நெல்லிக்கனியை ஔவைக்கு அளித்தவன் (தர்மபுரி)
- நள்ளி - (நீலகிரி )நட்டோர் உவப்ப நடைப்பரிகாரம் நல்கியவன் நண்பர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் நல்கியவன்.
- ஓரி - கொல்லிமலை தன் குறும்பொறை நாடு முழுவதையும் கோடியாருக்கு யாழ் மீண்டும் பாணருக்கு அளித்தவன்.

பாரி ஓரி நள்ளி ஆயே பேகன் பெருந்தோள் மலையன்
என்று எழுவருள் ஒருவனும் அல்லை

என்ற முறை காணப்படுகிறது இது தொல்காப்பியத்தின் உரையில் பேராசிரியர் மேற்கோளாகக் காட்டப்படும் பாடல்களில் ஒன்று. (பாரிவேள் ப. 28,29)

சங்க காலத்தில் வாழ்ந்த நல்லிசைப் புலவர்களும் பிற்காலத்து புலவர்களும் வல்லவர்களின் பெருமையை சிறப்பித்துப் பாடும் போது பாரிக்கு முதலிடம் கொடுப்பது மரபாகிவிட்டது. பாரிவேளைத் தமிழுலகம் மறவாமல் பாராட்டும் முறை இதுவானால் அவனுடைய பெருமையையும் மானுட விழுமியங்களை எடுத்துரைப்பது சிறப்பு.

**வேளீர் குலத் தலைவன் பாரி**

முல்லைக்கு தேர் கொடுத்தான் பாரி என்ற வள்ளலின் வரலாறு பற்றி பேசப்படுவது தான் வேள்பாரி. தமிழில் மிகப்பெரிய பிரபலமான நாவல்களில் இதுவும் ஒன்று. பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த வரலாற்றினைப் பற்றி பேசப்படுவது. அந்த காலகட்டத்தில் வடவேங்கடம் தென்குமரி என்று தமிழ் நிலத்திற்கு எல்லையோ, பெயரோ கிடையாது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐவகை நிலத்தில் வாழ்ந்த மக்கள் இனக்குழுக்களாகப் பிரிந்து வாழ்ந்தார்கள். யாருக்கும் அரசரோ,

அரசனோ கிடையாது. குலத் தலைவன் மட்டும் இருந்தான். குலத் தலைவன் சொல்கிறது தான், குலத்தின் மக்கள் கேட்டுக் கொண்டிருந்தனர். மக்கள் எவரும் சரிசமமாக வாழ்ந்து கொண்டிருந்தனர். சிறிது காலத்திற்குப் பிறகு மக்களின் அமைதி கொஞ்சம் கொஞ்சமாக குலைய ஆரம்பித்தது. நூற்றுக்கணக்கான குலங்கள் ஒன்றுடன் ஒன்று மோதத் துவங்கின. முதலில் கால்நடைகளுக்காக ஒவ்வொரு குலத்திற்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதுவே நாளடைவில் விளைநிலங்களை கைப்பற்றுவதற்கு என்று மிகப்பெரிய போராட்டமாக மாறியது. போரில் வெற்றி பெற்ற வலிமையான குலத்தின் தலைவர்கள் இனிமேல் நாங்கள் குல தலைவர்கள் அன்று, வேந்தர்கள் என்று, அவர்களே அவர்களை அறிவித்துக் கொண்டார்கள். அவ்வாறே மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியன் உருவகினார்கள். இம்மூன்று வேந்தர்களும் மற்ற குல தலைவர்களை, குறுநில மன்னர்கள் என்று அறிவித்தார்கள். ஆனால் சில குலத் தலைவர்களுக்கு இது எதுவும் பிடிக்கவில்லை. குடவர், அதியர், மலையர், வேளியர் என்று 20க்கும் மேற்பட்டவர்கள் இம்மூவேந்தர்களை எதிர்த்து சுதந்திரமாக அவர்களின் குல மக்களுடன் காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்து வந்தார்கள். அவ்வாறாக வாழ்ந்து வந்த ஒரு குலத்தின் தலைவரே பாரி வள்ளல். இதே காலகட்டத்தில் தான் ஐவகை நிலத்திற்கும் சென்று ஊர் ஊராக பாடி திரிந்தவர்கள் தான் பாணர்கள் சமூகத்தை சார்ந்த கலைஞர்கள். குலத் தலைவர்கள் பற்றியும், சிற்றரசர்கள் பற்றியும், மூவேந்தர்களை பற்றியும் பாணர் குல கலைஞர்கள் ஊர் ஊராக பாடி வந்தனர். அப்போது அங்குள்ள எல்லாவர்களையும் விட வள்ளல்களின் தலை நாயனாக இருந்தவன் தான் பறம்பு நாட்டை ஆண்ட வேள்பாரி. அவருடைய ஆளுகையும் ஆற்றலும் வாரிக் கொடுக்கும் வள்ளல் தன்மையும் பாணர்கள் எல்லாயிடங்களிலும் பாடி பரப்பி வந்தார்கள் எல்லாம் வள்ளல்களிலும் பரிசு பெற்ற பாணர்கள் பாரியிடம் மட்டும் தான் கருணையும் சேர்த்து பெற்றார்கள்.

**பறம்பின் குணம்**

16 குலங்கள் சேர்ந்த மக்கள் பாரியின் நாட்டில் குடி கொள்கிறார்கள். இவர்கள் எல்லோரும் ஒரு காலத்தில் குறுநில மன்னர்களால் போர் செய்தபோது அவர்களால் வீழ்த்தப்பட்டவர்கள் கைவிடப்பட்டவர்கள் ஆவார். இவர்கள் அனைவரும் பறம்பு தேசத்தில் வந்து தஞ்சம் புகுகின்றனர் அவர்களுக்கு அமைதியான நிம்மதியான வாழ்க்கையை வேள்பாரி கொடுக்கிறார். வருடத்திற்கு ஒருமுறை கொற்றவைக்கூத்து நடைபெறும் அப்பொழுது அந்நாட்டை சேர்ந்த அனைவரும் அதில் பங்கு பெறுவர். பதினாறு குலத்தைக் காட்டும் வகையில் 16 பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் தெய்வ வாக்கு என்று ஒரு விலங்கு அவ்விலங்கானது எந்த பொருளை முதலில் எடுக்கிறதோ அந்த பொருளுக்குரிய அக்குலத்தை சார்ந்த மக்கள் அவர்களின் தேசம் எப்படி அவர்களின் கைவிட்டு போனது அவர்கள் எவ்வாறு வீழ்த்தப்பட்டார்கள் என்ற கதை சொல்வார்கள். கடைசி நாள் வேள்பாரி. இவ்வாறு ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரின் கதையை சொல்வார்கள். இக்கூத்து முழுவதும் கேட்டறிந்த கபிலர் பறம்பு என்பது தனித்த இடம் அன்று வஞ்சிக்கப்பட்ட குலங்கள் அனைத்திற்கும் வாழ்விடம் என்பதும் பறம்பின் குணமே அரவணைப்பதும் அன்பு செலுத்துவதுமாக இருக்கிறது என கபிலர் உணர்ந்தார்.

**பறம்பு மலையின் வளம்**

இலக்கணப் பகுப்பின் ஐவகை நிலங்களில் முதன்மையான குறிஞ்சியைப் பெரிதும் பாடிய காரணத்தாலேயே குறிஞ்சிக் கபிலர் எனப் பெயர் பெற்றார் கபிலர். அவருக்கு அப்பெயர் பெறுவதற்குக் காரணமாக அமைந்தது

*பறம்பு மலையின் வளமும் இயற்கை சூழ்ந்த அழகியலுமே ஆகும். கபிலர் தம் அகப்பாடல்களில் மட்டுமின்றி புறநானூற்றுப் பாடல்களிலும் பறம்பு மலையின் வளத்தைத் தனித்து சிறப்பிக்கின்றார். அவ்வளங்கள் இன்னும் குறையாமலே உள்ளன. உழவர் உழாது பெறக்கூடிய வளங்கள் அவை*

***ஒன்றே வெதிரின் சிறியிலை நெல்விளை யும்மே***
***இரண்டே தீஞ்சுவைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே***
***மூன்றே கொடுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே***
***நான்கே அணிநிற வோரிபாய்தலின் மீதழிந்து***
***திணிநெடுங் குன்றம் தேன் சொரி யும்மே***

***(புறம் 109: 4-8)***

*என்று கபிலர் தமது புறப்பாடல் ஒன்றில் நேரடியாகவே பறம்பின் வளத்தை குறித்துக் காட்டுகிறார். கபிலர் தாம் இயற்றிய குறிஞ்சிப்பாட்டில் 99 வகையான பூக்களை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவை பெரும்பாலும் குறிஞ்சி நிலத்திற்குரிய மலர்கள் என்பதும் அவை பறம்பு மலையில் நிறைந்திருக்கக் கூடியவை என்பதும் உணர வேண்டியதாகும்*

***வள் இதழ்***
***...........................................,***
***மா இருங் குருந்தும் வேங்கையும் பிறவும்***

***(குறி.பா. அடி 61-95)***

*என மலர் வரிசை நீள்கிறது. இதற்குச் சான்றாக சங்க இலக்கிய காலத்தில் பறம்பு மலையாக விளங்கிய இம்மலை பக்தி இலக்கியக் காலத்தில் திருக்கொடுங்குன்றம் எனப் பெயர் விளங்கி திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற போதும் பல்வகை நறுமண மலர்கள் நிறைந்த நகர் என்றே இம்மலையைக் குறிப்பிட்டுச் சிறப்பிக்கிறார். அவ்வரிசையிலும் அரிய வகை மலர்கள் இடம்பெறுகின்றன.*

***மரவத்தோடு மணமாதவி மௌவலலது விண்ட***
***குரவத்தோடு விரவும்பொழில் சூழ்தண்கொடுங் குன்றம்***
***அரவத்தோடு மிளவெண்பிறை விரும்பக் கொன்றை***
***நிரலச்சடை முடிமேலுடன் வைத்தானெடு நகரே***

***(திருக்குடுங்குன்றம் 147)***

*என்ற பறம்பு மலையாகிய திருக்குடுங்குன்றத்தின் மலர் மணத்தைத் தம் பாடல்களில் பரப்புகிறார் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் திருஞானசம்பந்தப் பெருமான்*

**பறம்பு மக்களின் பண்பு நலன்கள்**

*அறநெறிகளைப் போற்றி பின்பற்றும் மாண்பு பறம்பு மக்களில் எவ்வாறு காணப்படுகிறது என்றால் ஒவ்வொருவருக்கும் எனத் தனி சொத்து எப்பாடுபட்டாலும் அதை சேமித்து பெருக்க வேண்டும் என்ற பெருந்தாகமும் இங்கு இல்லை (வே.பா .நா.பக்கம் 97) என்ற நாவல் வரிகள் உறுதிப்படுத்துகின்றன. பறம்பு மக்கள் இயற்கையின் பின்னால் ஓடி ஆடி சிரித்து மகிழ்ந்து வாழ்ந்தனர். இயற்கை வழங்குகிறது நாம் வாழ்கிறோம் இடையில் விற்கவும் வாங்கவும் நாம் யார்? (வே.பா .நா.பக்கம் 114) என்று வரிகள் மூலம் அறிய முடிகிறது.*

**பறம்பு நாட்டின் ஆட்சி முறை**

*சங்க காலத்தில் இருந்த அரசாட்சி முறையானது அதிகாரத்தை மையமிட்டதாக விளங்கியது. ஆனால் பறம்பு நாட்டின் ஆட்சி முறை அதற்கு விதிவிலக்கு, எனலாம். அதிகாரம் உயிர் பெறாத இடத்தில் அன்பு மட்டுமே தழைத்திருக்கும் என்ற உண்மையை காண்பிக்கிறனர். அன்புமயமாக திகழும் ஓர் உலகமாக பறம்பு விளங்கியது. அங்கு விதிகளும் இல்லை, தண்டனைகளும் இல்லை. தலைவன் முதல், கடை நிலை வீரன் வரை அனைவரும் சரி நிகராக பார்க்கப்பட்டனர் இதனை, நாடென்பது அரசும் அரசநியதியும் தான் என்று விதி செய்பவர்களுக்கு மத்தியில் நாடென்பது அரசற்ற மக்களின் ஆதி நிலம் எனப் பாரி நிலைநிறுத்தியுள்ளான் (வே.பா .நா.பக்கம் 95) என்று நாவல் வரிகள் உறுதிப்படுத்துகின்றன*

***எல்லோரு மோர் குலம் எல்லாரு மோரினம்***
***எல்லோரு மிந்திய மக்கள்***
***எல்லாரும் மோர் நிறை எல்லாரும் ஓர்விலை***
***எல்லோரும் இன்னாட்டு மன்னர்கள்***

***(பாரதியார் கவிதைகள் பக். 55)***

*என என்ற பாரதியின் வரிகளுக்கு எடுத்துக்காட்டாய் பறம்பு நாடு இருந்தது அலங்காரமும் பாவனைகளும் படியாத அன்பின் தூய வடிவமாகப் பறம்பு நாடு திகழ்கின்றது*

***அன்பு இலார் எல்லாம் தமக்குஉரியர்; அன்புடையார்***
***என்பும் உரியர் பிறர்க்கு (திருக்குறள்: 72)***

*என்ற திருக்குறளுக்கு இலக்கணமாகப் பறம்புநாடு காட்சி அளிக்கிறது . மனத்தின் ஓரத்தில் இருக்கும் அழுக்கு கூட நம்மை வெட்கித் தலை குனியச் செய்யும் அளவுக்கு உக்கிரம் ஏறிய பேரன்பு இது (வே.பா .நா. பக்கம் 91). என்று நாவல் வரிகள் பறம்பு மக்களின் அளப்பறியா அன்பினை பறைச ாற்றுகிறது பேரன்பின் உருவாக பறம்பு மக்களின் வாழ்க்கை மனிதத்துவத்தை மறந்து கொண்டிருக்கும் இன்றைய இயந்திரயுக மனிதர்களுக்கு எடுத்துக்காட்டாக திகழ்கின்றனர்.*

**பாரியின் கொடைத்தன்மை**

*பறம்பு மலையை ஆண்ட குறுநில மன்னன். வண்டுகள் உண்ணும் படி நல்ல பூக்கள் தேனை வழங்கும் சிறப்புடைய சுரபுன்னைகள் நிறைந்த வழி அப்பாதையின் வழியே பாரி தன் தேர் மீது ஏறிச் சென்றான். இயற்கையின் அழகை ரசித்து வந்த பாரி பாதையில் சிறிய பூக்களை உடைய, முல்லைக்கொடி பற்றி படர்வதற்கு இடம் இல்லாமல், தவித்துக் கொண்டிருந்தது. இதை பார்த்தவுடன் தான் ஏறி வந்த தேரை, அவ்விடத்தில் நிறுத்தி, முல்லைக்கொடியை பார்த்து அதன் இயற்கை அழகு ரசித்து, ஓர் உயிரினம் ஆனாலும், அதன் தேவை புரிந்து, தான் ஏறி வந்த தேரையே அதற்கு பரிசாக கொடுத்தான். தேரில் முல்லைக்கொடியே படரவிட்டான் இத்தகைய இரக்கம் குணம் கொண்டவன் பாரி, என்பது பின்வரும் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.*

***..................................சும்பு உண***
***நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்***
***சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய***
***பிறங்கு வேள் அருவிவிழும் சாரல்***
***மறம்பின் கோமான் பாரதியும்***
***(சிறுபாணாறுப்படை : 87 - 91)***

*அருவி நீரை விட இனிய மென்மையுடைய வேள்பாரியைப் பாடி சென்றால் பலவற்றை பரிசாக பெறுவாய் என்பதை,*

***நீரினும் இனிய சாயற்***
***பாரி வேள்பால் பாட்டினை செலினே***
***(புறம் : 105)***

*என புறநானூறு பாடல் வரிகள் சுட்டுகின்றன. பாரி வேள் வீரத்திலே சிறந்தவன், பண்பிலே நிறைந்தவன். எல்லாவற்றிற்கும் மேலாக கொடையிலே இணையற்றவன் பாரி என்றவுடன் முதலில் அவருடைய ஆட்சி நினைவுக்கு வருவதில்லை, அவன் வீரம்கூட நினைவுக்கு வருவதில்லை, அவருடைய வள்ளன்மையே மக்களின் உள்ளங்களில் தோன்றியது. புலவர்கள் பாட்டுப்பாடி செல்லும்போது மன நிறைவையும், உவகையும், நன்றியுணர்வையும், பலவகை பரிசீல்களை பெற்றுச் சென்றார்கள். புலவர்களுக்கு பாரி வள்ளல் கொடுப்பது உணவு மட்டுமன்று, ஓர் ஊர் முழுவதையும் கொடுக்கும் குணநலன் உடையவன். பாரி வள்ளலின் உயர்ந்த பண்புகளை கண்ட புலவர் அவருடைய கொடை திறனைக் கண்டு வியப்படைந்தார், அவரே கபிலர். கொடையாக கொடுப்பது ஒரு மிகப்பெரிய நற்செயலாகும், என்பது யாமறிந்த உண்மையே. நாம் பெற்ற செல்வங்கள் எல்லாம் மற்றவர்களுக்கு கொடுப்பதற்கே.*

***தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு***
***வேளாண்மை செய்தற் பொருட்டு***
***(திருக்குறள் 222 )***

*என்று குறிப்பிடுவது நாம் ஈட்டும் செல்வம் மற்றவர்க்கும் கொடுப்பதற்கே என்கிறார். கொடை குறித்து புறநானூற்று பாடல் கூற்று*

***கொள்ளளனக் கொடுத்தல் உயர்ந்ததன்று***
***(புறம் 204: 4)***

*இதோ வாங்கிக்கொள் என்று நாமே மனமுவந்து கொடுப்பது மிகச்சிறந்தது என்கிறது.*

*வள்ளல் வேள்பாரியின் கொடைப் பண்பை பற்றி கபிலர் மழையைப் போன்று கைமாறு கருதாது கொடையை வழங்குபவன் என்று கூறிப் புகழின் உச்சிக்கே கொண்டு செல்வதை காணலாம்*

***பாரி பாரி என்று பல ஏத்தி***
***ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்***
***பாரி ஒருவனும் அல்லன்***

*மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப் பதுவே*

*(புறம் 107)*

*பறம்பு பாடினார் அதுவே அறம்பூண்டு*

*பாரியும் பரிசிலர் இரப்பின்*

*(புறம் 108: 4-5)*

கேட்போருக்கு மட்டுமின்றி கேட்காமலேயே கொடுப்பதில் வள்ளல் இதுவே பாரியின் தனி சிறப்பு. அதுமட்டுமின்று அவர் தனது தேசத்தில் உள்ள எல்லா குதிரைகளுக்கும் காலில் அடிபட்டு இருக்கிறதை கண்டு அது என்னவென்று விசாரித்த போது தான் தெரிந்தது நாம் குறிஞ்சி நிலப் பகுதியில் இருக்கிறோம் மலையின் மீது மேலேயும் கீழேயுமாக குதிரைகள் செல்ல வேண்டி இருக்கிறது வேகமாக செல்வதால் பாறைகளால் குதிரைகளுக்கு காலையில் அடிபட்டு இருக்கிறது என்று உணர்ந்த பாரி சிறிது நேரம் சிந்தித்துவிட்டு குதிரையின் கால்களில் கவசம் அணியுங்கள் அது குதிரையின் முட்டி வரை இருக்க வேண்டும் என்றார். அவ்வாறு விலங்குகள் மீதும் பற்று உடையவர்.

### வஞ்சகமான முறையில் பாரியை வீழ்த்தல்

மன்னர்கள் முற்றுகை இட்டிருந்தாலும் புலவர்கள் வந்து செல்ல தடை இல்லாத நிலை. மூவேந்தர்கள் போர்க்களத்திலும் புலவர்களை மதித்தார்கள். அவ்வாறு ஒரு முறை கோட்டைக்குள் இருந்து வெளிவந்த பாரியின் நண்பர் கபிலரிடமே உதவிக் கேட்டார்கள். நாங்களும் பல காலமாக முற்றுகையிட்டு காத்திருக்கிறோம். எப்படி பாரி கோட்டைக்குள் இருந்து கொண்டு சமாளிக்கிறார் என்று கேட்டார்கள். மேலும் பாரியை எப்படி வெல்வது என்று வழி கேட்டார்கள். கபிலர் சொல்கிறார், பாரியின் பறம்பு மலையில் தேனடைகள் அதிகம் உள்ளது. வேரில் பழுத்த பழம் முதலிய பழங்களும் கிழங்குகளும் உள்ளது. மேலும் மூங்கில் நெல் உள்ளது. அவற்றைக் கொண்டே உணவு தேவையை சமாளித்துக் கொள்ள முடியும். நீங்கள் ஆண்டு கணக்கில் முற்றுகையிட்டாலும் வெல்ல முடியாது என்றார். அப்படியெனில் எப்படி தான் வெல்வது என்று கேட்டதற்கு போரில் அவரை வெல்ல முடியாது. நீங்கள் யாகசமாக முறையில் சென்று தேசத்தை கேட்டாலும் அவர் கொடுத்துவிடுவார். அதற்கு நீங்கள் இரவலர்கள் போல் சென்று பாட்டு பாடி அவரை மகிழ்விக்கவும், முடிந்தால் உங்கள் மனைவியையும் அழைத்து சென்று பாணர்கள் வேடத்தில் பாடினால், மனம் மகிழ்ந்து கேட்டதை பரிசாக கொடுப்பான் பாரி என்று அவர்களுக்கு வழி காட்டினார் கபிலர். மேலும் விரைவாக சென்று கேட்டால் நல்லது.

பாரி ஏற்கனவே அவரது ஆட்சிக்கு உட்பட்ட 300 ஊர்களையும் தானம் அளித்து விட்டார். இப்போது இருப்பது இந்த மலையும் அரண்மனையும் மட்டுமே என்றார். அவ்வாறே அவர்கள் சென்று பாட்டு பாடி பாரியை மகிழ்வித்தனர். மூவேந்தர்களிடம் பாரி சொல்கிறார் தயங்காமல் கேளுங்கள், என்னிடம் இருப்பது எதை கேட்டாலும் தருவேன் என்றார். மூவேந்தர்கள் சிறிதும் கூட தயங்காமல் உன் நாடும், உன் உயிரும் என்று தயங்காமல் கேட்டனர். அவையில் இருந்தவர்கள் அதிர்ச்சடைந்து தானம் கேட்பதற்கு எல்லை உண்டு நாட்டைக் கேட்டாலும், உயிரைக் கேட்கலாமா? என்று எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால், பாரிக்கு தெரிந்திருந்தது வந்திருப்பது பாணர்கள் அன்று, மூவேந்தர்கள் என்று. சொன்ன சொல்லை மீறக்கூடாது என்று வாளை எடுத்து வைத்துவிட்டு அவர்கள் முன் நின்று உயிரை எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். இப்படி ஒருவன் தானம் செய்ய முன் வருகிறானே எனப் பாராட்டாமல் அவர்கள் பாரியைக் கொன்று விட வேண்டும் என்ற நோக்கத்தில் உறுதியாக இருந்து மூவேந்தர்கள் வாளை பாரி மீது பாய்த்து அவர் உயிரை மாய்த்தார்கள். இல்லை என்று கேட்பவர்களுக்கு கொடுக்கும் கொடை

உள்ளம் கொண்ட பாரி தன் உயிரையும் அளித்து இரவாப் புகழ் பெற்றார்.

## முடிவுரை

சங்க கால மன்னர்கள் அறநெறி தவறாது ஆட்சி செலுத்தி மக்களை நல்வழியில் நடத்தினார்கள். மிக நீண்ட சங்கத்தமிழுக்கு காலத்தின் கடைசி கட்டமாக குறிப்பிடம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு காலகட்டத்தில் வாழ்ந்த ஒரு குறுநில மன்னன் தான், கடையியேழு வள்ளல்களில் சிறந்த வேள்பாரி, என ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இயற்கை வளம் மற்றும் மண்வளம் காக்க தேவையான அளவில் பெய்யும் மழை போல வறுமையில் வாழும் புலவர்களின் வாழ்வு செழிக்க அள்ளி அள்ளி வழங்குபவன் பாரி. அது மட்டுமா அவன் ஆளுகையில் உள்ள எல்லா உயிரினங்களுக்கும் அவன் காவல் காரனாகயிருந்து காக்கிறான் என்று பெருமிதம் கொள்கிறார் கபிலர், இதை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இயற்கை வளம் கொஞ்சி விளையாடிய பறம்பு மலையில் எங்கும் செல்வ வளம். செழுப்பின் உச்சத்தில் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். விவசாயிகள் பயிர் செய்யாமலே, பயிர்கள் வயல்வெளிகளில் விளைந்த பொற்காலமானது. பாரி நகர்வலம் செல்லும் போது காற்றில் தப்பிய முல்லைக் கொடி அங்கும் எங்கும் அலை கழிந்து ஆடுவதைக் கண்டு கொழுகொம்பில்லாமல் தவித்த சிறு முல்லைக் கொடியை தேரில் படர விடுகிறான் பாரி. இவ்வளவு இரக்கம் குணம் கொண்டவன் பாரி என்பது புலனாகிறது. இயற்கை வளம் நிரம்பிய மலை மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு தேவையானதை தாமே வழங்கி காத்தது பறம்புமலை. இப்பறம்பு மலையில் பொறுமை இழந்த மூவேந்தர்கள் சூழ்ச்சி செய்து புலர்களைப் போன்று வேடமிட்டு அரண்மனைக்குள் நுழைந்து பாரியக் கொன்றார்கள். அவன் இறப்பினும் கொடைதிறன் போற்றி உயரத்தில் வைக்கின்றனர். தன் பயன் கருதாமல் மற்றவர் துயர் போக்குவதை இறைச்செயல் என்றெண்ணி வாழ்ந்த பாரி மன்னன் என்று இல்லை.

## துணைநூற் பட்டியல்


1. அனிதா கு., வீரயுக நாயகன் வேள்பாரி புதினம் மொழியும் வாழ்வும், சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், 2022 அன்று அணுகப்பட்டது.
2. கந்தசாமி முதலியார், சிறுபாணாற்றுப் படை விளக்கம், ஒற்றுமை ஆபீஸ், தியாகராய நகர், மதராஸ், 1947.
3. கனகா, வேள்பாரி நாவல் காட்டும் பறம்பு மக்களின் வாழ்வியல், பிரணவ் தமிழியல் ஆய்விதழ், ஏப்ரல் 2023 அன்று அணுகப்பட்டது.
4. கார்த்திக் ஆ., சங்க காலப் போர் மரபுகளும் வேள்பாரியும், சர்வதேச தமிழ் ஆய்விதழ், 2022 அன்று அணுகப்பட்டது.
5. குமாரசாமி சோமசுந்தரம், மனித விழுமியங்கள், ஸ்டார் லைன் அச்சகம், கொழும்பு - 14, 1995.
6. குப்புசாமி பிள்ளை, சங்க கால வள்ளல்கள், அம்மையப்பரகம், 77, அவதானம், சென்னை ,ஜூலை 1951.
7. சாமி நாதய்யர் உ.வே., பத்துப்பாட்டு மூலமும் நச்சினியார்க்கினியருரையும், தமிழ் பல்கலைக் கழக மறு தோன்றி அச்ச கம், தஞ்சாவூர், 1986.
8. சாமி சிவஞானம் எம்.ஏ., திருமுருகாற்றுப்படை உரை, நிருவாக அலுவலர், சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர் .
9. சுடரொளி பா., கடையேழு வள்ளல், பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், 2019.
10. சுப்பிரமணிய பாரதி சி., பாரதியார் கவிதைகள், விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை.
11. ஜெய போஸ் எம்., திருக்குறள் (மூலமும் தெளிவுரையும்) எல்.கே.எம் பப்ளிகேஷன், 33 /4, (15/ 4) ராமநாதன் தெரு, தி நகர் சென்னை.

12. புலியூர் கேசன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், ஜி 4, சாந்தி அடுக்கம், ராயப்பேட்டை, சென்னை, முதல் பதிப்பு, ஜூன் 2010.
13. ரோஸ்லின் வே., வீரயுக நாயகன் வேள்பாரி நாவல் உணர்த்தும் பாரின் பண்பு நலன்கள், புதிய அவையகம், ஜூன் 2023 அன்று அணுகப்பட்டது.
14. பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், அடையாளம் பதிப்பகம், 1250/1கருப்பூர் சாலை, புத்தாநந்தம் திருச்சி 621310.
15. வெங்கடேசன் சு. வீரயுக நாயகன் வேள்பாரி, விகடன்பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை, ஐந்தாம் பதிப்பு, நவம்பர் 2020.
16. ஜகந்நாதன் கி.வா., பாரிவேள் (வரலாறு), அமுதம் நிலையம், ப்ரைவேட் லிமிடெட், தேனும் பேட்டை, சென்னை, நான்காம் பதிப்பு 1958.
17. ஜகந்நாதன் கி.வா., ஏழு பெரு வள்ளல்கள், அமுதநிலையம், பிரைவேட் லிமிடெட், தேனும்பேட்டை, சென்னை, நவம்பர் 1959.